IV.—GOVERNMENT BILL.

THE MADRAS (TRANSFERRED TERRITORY) INCORPORATED AND UNINCORPORATED DEVASWOMS BILL, 1959.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill[a], 1959.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill, 1959.'

The motion was put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

V.—DISCUSSION *RE* QUESTION HOUR.

SRI M. KALYANASUNDARAM : *கனம் சபாநாயகர் அவர்களே, கேள்வி நேரம் இரண்டு நாட்களாக முக்கால் மணி நேரத்தில் முடிந்து விடுகிறது. நேற்றும் இன்றைக்கும் சில அமைச்சர்கள் இல்லாத காரணத்தால் முக்கால் மணி நேரத்தில் முடிந்து விட்டது. அதனால் இப்போது இருப்பதை விட இன்னும் அதிகமாக பத்து கேள்விகளையாவது சேர்த்துக்கொண்டு வரக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். அமைச்சர்கள் வரமுடியவில்லையானால் அவருடைய கேள்விகளை சேர்க்காமல், வரக்கூடிய அமைச்சர்களுடைய கேள்விகளை அதிகமாக ஏன் சேர்த்துக்கொள்ளக் கூடாது? அல்லது வேறு கேள்விகளையாவது சேர்த்துக்கொள்ளக் கூடாதா என்று கேட்கிறேன். அதைப்பற்றி கொஞ்சம் யோசித்து முடிவு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.*

MR. SPEAKER : *அதற்கு நான் என்ன பண்ணுவது? கேள்விகள் சுமார் பதினைந்து நாட்களுக்கு முன்னதாகவே அச்சகத்திற்கு அனுப்பப்படுகின்றன. அப்போது எந்தெந்த மந்திரிகள் வரமாட்டார்கள் என்பது தெரிவது இல்லை. கேள்விகள் அச்சடித்து வந்த பிறகு மந்திரிகள் தாங்கள் சபைக்கு வரமுடியாது என்றும் வெளியூருக்குப் போவதாகவும் சொல்லுகிறார்கள். அதன் பிறகு அவைகளை மாற்றி அமைப்பது என்பது முடியாத காரியம். அவர்கள் முன் கூட்டியே வரமுடியாது என்று சொன்னால் அவர்களுடைய கேள்வியைச் சேர்க்காமல் இருக்கலாம், அல்லது அதற்கு வேறு உபாயம் உண்டு. அதாவது கனம் அங்கத்தினர்கள் இரண்டு அல்லது மூன்று உப கேள்விகளுக்கு மேல் கேட்பதில்லை என்று உறுதி கொடுத்தால் இன்னும் அதிகப்படியாக பத்து கேள்விகளை சேர்த்துக்கொள்ளலாம். அல்லது*

---

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 9th December 1959.

9th December 1959] [Mr. Speaker]

மந்திரிகள் வர முடியாது என்று முன்பாகவே சொல்லி விட்டால் இன்னும் அதிகப்படியாக பத்து கேள்விகளைச் சேர்த்துக்கொள்ள லாம். சில நாட்களில் முக்கியமான பிரச்னைகளைப்பற்றி கேள்விகள் வருகின்றன. அப்பொழுது அதிகப்படியான உப கேள்விகளுக்கு இடமளிக்க வேண்டியதாக இருக்கிறது. சில தினங்களில் உணவுப் பிரச்னையைப்பற்றி கேள்வி வருகிறது. அப்படி நேற்றுகூட வந்தது. அதன்மேல் சுமார் 35 உப கேள்விகள் கேட்க அனுமதித்தேன். அதனால் ஒரு விதத்திலும் தவறு ஏற்படவில்லை. கேள்விகள் குறைவாக இருந்து முக்கால் மணி நேரத்தில் முடிந்து விட்டால் அதன் பிறகு கவர்னர் உரையின் மீது விவாதம் நடக்கும். அதுவும் நல்லதுதான். ஏனென்றால் இன்னும் அதிகப்படியாக இரண்டு மூன்று அங்கத்தினர்கள் விவாதத்தில் பங்கு எடுத்துக்கொள்ளலாம் அல்லவா ?

SRI A. V. THOMAS : Sir, there seems to be something wrong with the mike. It may be attended to. The mike used by the hon. Member, Sri Vinayakam, seems to be overpowerful but we could not hear from the mike used by the Hon. Minister for Home.

THE HON. SRI C. SUBRAMANIAM : The hon. Member, Sri Vinayakam, does not require a mike.

MR. SPEAKER : I will have the matter examined. As the Hon. Minister for Finance has put it, the hon. Member, Sri Vinayakam, does not require a mike. Perhaps the Hon. Minister Sri Bhaktavatsalam requires an accelerated mike.

* **SRI K. ANBAZHAGAN :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நமது சட்ட மன்றத்தில் கேட்கப்படுகிற கேள்விகளுக்கு முதல் கேள்விக்கு விடை அளிக்கும்போது ஆங்கிலத்திலேயே விடை அளிக்கப்படும் முறை இருந்து வருகிறது. பல அங்கத்தினர்கள், அதன் கருத்தை உடனடியாக உணர்ந்து உடனடியாக துணைக் கேள்விகள் கேட்க முடியாமல் இருக்கிறார்கள், துணைக் கேள்விகள் போட முடியாத நிலை ஏற்படுகிறது. இதைக் கருத்தில் வைத்துக் கொண்டு நமது மன்றத் தலைவர் அவர்கள் ஆளும் கட்சிக்கோ அல்லது அமைச்சர்களுக்கோ, கேட்கப்படும் மூலக் கேள்விகளுக்கு முதல் கேள்விக்கு விடை கொடுக்கும்போது தமிழிலேயே விடை அளிக்க சிபாரிசு செய்வார்களா ?

MR. SPEAKER : அதைப்பற்றி யோசிக்கிறேன்.

VI.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER : We shall now continue the discussion on the Governor's Address. The hon. Member, Sri Sasivarna Thevar, will now speak.

SRI T. L. SASIVARNA THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, நமது மாநில கவர்னர் அவர்கள் உரையின் மீது சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். அவருடைய